செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் 22.04.2016

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; மார்ச் 2016**

**தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 மார்ச்சிற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 மார்ச்சிற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 110.0 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (பெப்ரவரி) சுட்டெண்ணான 110.8 உடன் ஒப்பிடுகையில் 0.8 சுட்டெண் புள்ளி மற்றும் 0.72 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் 0.73% பெறுமதி வீழ்ச்சியினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் 0.07% பெறுமதி அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

பெப்ரவரி 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 மார்ச்சிற்கான உணவுப் பொருட்களின் பெறுமதி, 0.73% வீழ்ச்சியைக் காட்டுகிறது. கடந்த மாதம் (பெப்ரவரி) உடன் ஒப்பிடும்போது மரக்கறி(0.47%), அரிசி(0.39%), பச்சை மிளகாய்(0.09%), தேங்காய்(0.03%), சின்ன வெங்காயம்(0.03%), வாழைப்பழம்(0.03%), புளி(0.02%) என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே உணவுப் பொருட்களின் பெறுமதி வீழ்ச்சிக்குக் காரணமாகும். எனினும் பெரிய வெங்காயம்(0.08%), நெத்தலிக் கருவாடு(0.03%), உடன் மீன்(0.03%), பாண்(0.03%), மிளகாய்த்தூள்(0.02%) என்பவற்றின் விலைகளில் கடந்த மாதம் (பெப்ரவரி) உடன் ஒப்பிடும்போது பெறுமதி அதிகரிப்புக் காணப்படுகிறது.

பெப்ரவரி 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 மார்ச்சிற்கான உணவல்லாப் பொருட்களின் பெறுமதி, 0.07% அதிகரிப்பினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் ‘மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து’ இல் ஏற்பட்ட அதிகரிப்பினாலாகும். மேலும் ‘உடையும் காலணியும்’, ‘வீட்டு வசதி, நீர், மின்சாரம், எரி வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்’, ‘தளபாடமும் வீட்டு உபகரணமும் வழமையான குடித்தனப் பராமரிப்பும்’, ‘சுகாதாரம்’, ‘உணவு விடுதியும் ஹோட்டல்களும்’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’ ஆகிய பிரிவுகளின் பெறுமதியில் சிறிதளவு மாற்றம் காணப்படுகிறது. எனினும் ‘சுகாதாரம்’, ‘போக்குவரத்து’, ‘தொடர்பாடல்’, ‘கேளிக்கை மற்றும் கலாச்சாரம்’, ‘கல்வி’ ஆகிய பிரிவுகளின் பெறுமதி மாற்றத்தில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

தே.நு.வி.சு. அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர.சத்தரசிங்ஹ அவர்கள், 2016 மார்ச்சிற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்திற்கு வருடம் பணவீக்கம் 2.2% ஆகவும் பெப்ரவரி 2016 இற்கான பணவீக்கம் 1.7% ஆக இருந்ததெனவும் தெரிவித்தார்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மிக அண்மைய நுகர்வோர் விலைச் சுட்டெண் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணாகும். 2015 ஒக்டோபரில் இருந்து தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்(அடிப்படை2013=100) இனை மாதாந்தம் 21 நாட்கள் இடைவெளியில் வெளியிடுகிறது..

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தொ.இல.; 011-2147001/ 011-2147020